Published on 14, Jan-2025 ISSN: 3049-2688 (Online)

# காலந்தோறும் தமிழில் மெய்ம்மயக்கங்கள்

முனைவர் த. புஷ்பராணி
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

**முன்னுரை**

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன்மரபில் தனி நின்ற எழுத்துகளின் இலக்கணம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் மெய்ம்மயக்கம் பற்றிய செய்திகளும் அடங்கும். இதனை மொழிநூல் வல்லுனர்கள் "உருபனமைப்புக் கட்டுப்பாடு" என்று குறிப்பிடுகின்றனர். இம்மெய்ம்மயக்கம் தமிழ் மொழியில் எத்தகைய இன்றியமையாத இடம்பெறுகிறது என்பது தொடங்கி அதன் பயன், சொற்களில் அவை வருமிடம், அதன் வகைகள், தொல்காப்பியர் — நன்னூலார் காலங்களுக்கும் தற்காலத்திற்கும் இடையேயான ஒற்றுமை — வேற்றுமைகள் ஆகியவை பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** தொல்காப்பியம், நன்னூல், மெய்ம்மயக்கம், இடைநிலை

## மெய்ம்மயக்கம்

மெய்ம்மயக்கம் என்பது தமிழின் பதினெட்டு மெய்கள் சொல்லின் இடையில் மயங்கி வரும் நிலைகள் பற்றி விளக்குவது ஆகும். அதாவது, தனிமெய்யோடு தனிமெய் மயங்குவது மெய்ம்மயக்கம் எனப்படும். சொல்லின் இடையில் ஒரு மெய்யைத் தொடர்ந்து அதே மெய்யோ பிறிதொரு மெய்யோ ஒன்றன்பின் ஒன்று மயங்கி வருவது அல்லது ஒலிப்பது மெய்ம்மயக்கம் எனப்படும்.

'தமிழ் இலக்கண உணர்வுகள்' என்ற தற்காலத் தமிழ் உரைநடை இலக்கண நூல், மெய்ம்மயக்கத்தை 'இடைநிலை மெய்ம்மயக்கம்' என்று குறிப்பிடுகின்றது. இதில் மொழிமுதல், மொழியிறுதி எழுத்துக்களைப் போல மொழியிடை எழுத்துக்களை வரையறுத்துக் கூற இயலாததால் மொழியிடையில் வரும் மெய் எழுத்துக்களை எவ்வெம் மெய் எந்த எந்த மெய்களுடன் மயங்கி வரும் எனத் தொல்காப்பியர் செய்த வரையறையே தற்காலம் வரை குறிப்பிடப்படுகின்றது. மொழியியல் அடிப்படையில் இக்கால அறிஞர்கள் சிற்சில இடங்களில் மட்டும் மாறுபடுகின்றனர். மொழி முதல், மொழியிறுதி ஆகிய இடங்களில் வரும், வராத எழுத்துக்கள் தத்தம்பெயரைக் கூறும்போது முதலிலும் இறுதியிலும் வருதல் போல இடையில் மயங்காது எனக் கூறப்பட்ட எழுத்துகள் மயங்கி வராது." (ஆ.சிவலிங்கனார் தமிழ் இலக்கண உணர்வுகள் ப.58) 'பயன்பாட்டு இலக்கணம்' என்ற தற்கால உரைநடை வடிவிலான இலக்கண நூலில் உடனிலை மெய்ம்மயக்கமாக மட்டுமே வரும் எழுத்துகளாக க,ச,ட,த,ப,ற என்ற ஆறு வல்லின மெய்களைக் குறிப்பிட்டுள்ளமை தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு மரபிலக்கண நூல்களிலிருந்தும் சற்று மாறுபட்டதாக அமைந்துள்ளது. அதாவது, க,ச,த,ப ஆகிய நான்கே உடனிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வரும் என்று கூறியிருக்க இந்நூலாசிரியர் ட, ற என்ற இரு மெய்களையும் இணைத்துக் குறிப்பிட்டுள்ளார். (பேராசிரியர் முனைவர் சிவ.விவேகானந்தன், பயன்பாட்டு இலக்கணம், ப.25) இந்நூலாசிரியர் ஏனையவற்றில் தொல்காப்பியர் நன்னூலாரின் கருத்துக்களை ஒத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

## மெய்ம்மயக்கத்தின் வேறு பெயர்கள்

மெய்ம்மயக்கம் என்ற பெயரைத் தவிர வேறு பல பெயர்களும் இலக்கண நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. சான்றாக, "சங்கம் புணர்ச்சி சையோகம் மயக்கம் புல்லல் கலத்தலும் பொருள் ஒன்றேயாம்" என முத்துவீரியம் தனது 66 ஆவது நூற்பாவில் மெய்ம்மயக்கத்துக்கான வேறு பெயர்களாகச் சுட்டியுள்ளது.

## மெய்ம்மயக்கத்தின் பயன்

மெய்ம்மயக்கம் என்பது மொழி அமைப்பில் முக்கியப் பங்குவகிக்கின்றது. தமிழ் இலக்கண


நூலார் கூறும் மெய்ம்மயக்கம் தமிழ் ஒலிமுறைகளுக்கு ஏற்ற விதத்தில் அமைந்த ஒன்றாகும். மெய்ம்மயக்கத்தின் பயன்கள் பலவாயினும் அவற்றுள் முதன்மையானது ஒரு சொல் தமிழ்ச் சொல்லா? அல்லவா? என்பதை அறிய உதவுவது ஆகும். தகவல் தொடர்பின் வளர்ச்சியால் நம் தமிழ் மொழியின் சொற்களின் பயன்பாட்டிலும் தற்காலத்தில் சிலமாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. அதாவது, "பன்னாட்டுறவும் பன்மொழியாளர்கள் உறவும் பெருகிவிட்டமையால் அவர்தம் மொழிச் சொற்களில் சில பல தங்களுக்குள் கலந்துவிட்டன. இந்நிலை இயல்பானது. தடைபடுத்த முடியாத ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் தமிழில் கலந்துள்ள வேற்றுமொழிச் சொற்களை இனங் கண்டு அவற்றை அகற்றிட முனைதல் வேண்டும். நமது மொழியில் உரிய, பொருத்தமான சொற்கள் இருக்கும்போது அச்சொற்களுக்குப் பதிலாக வேற்றுமொழிச் சொற்கள் நுழைய, நுழைக்க முயன்றால் அதனை நாம் ஏற்கக் கூடாது. ஏற்கப்படுமானால் நம் மொழிக்களஞ்சியம் குறைந்துவிடும்" என்கிறார் தி. முத்துக்கண்ணப்பன். (தி. முத்துக்கண்ணப்பன், நல்ல தமிழ் அறிவோம், ப.116) ஆகவே நம் மொழியில் கலந்துள்ள வேற்றுமொழிச் சொற்களை இனங்காண முயலும் போது நாம் தமிழ்மொழியில் தெள்ளிய அறிவு உடையவராக இருத்தல் அவசியம் ஆகின்றது. இத்தகைய பிறமொழிக் கலப்புச்சொற்களை தவிர்க்கவும் தமிழ்மொழியின் மெய்ம்மயக்க விதிகளைப் பற்றிய அறிவு இன்றியமையாத ஒன்றாகிறது. காரணம் தற்கால ஊடகங்களில் ஏற்படும் எழுத்துப்பிழைகளில் அதிகமாக உள்ளவை மெய்ம்மயக்கங்களே ஆகும். ஊடகங்களில் நிகழும் இப்பிழைகள் அவற்றைக் காண்போர் மனத்தில் எளிதில் பதிகின்றன. இவை மாணவ சமுதாயத்தினரிடமும் பிழைகள் மிகுதியாகக் காரணமாக அமைகின்றன.

## சொல்லில் மெய்ம்மயக்கம் வருமிடம்

தமிழ் மொழியில் மெய் எழுத்துகள் சொல்லின் முதலில் வரும் வழக்கம் இல்லை. ஆகவே மெய்ம்மயக்கமானது சொல்லின் இடையில் மட்டும் வரும். தமிழ்ச் சொல்லின் முதலிலும் ஈற்றிலும் இரண்டு மெய்கள் அடுத்தடுத்து மயங்கி வராது. அவ்வாறு வரின் அது தமிழ்ச்சொல் அன்று. ஆனால், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழி முதல், மொழி இறுதி ஆகிய இடங்களிலும் இரண்டு மெய்கள் தொடர்ந்து மயங்கி வரும்.

## மெய்ம்மயக்கத்தின் வகைகள்

மெய்ம்மயக்கத்தை இருவகைகளில் பாகுபடுத்திக் கூறமுடியும். முதலாவது எழுத்து அடிப்படையில், இரண்டாவது எண்ணிக்கை அடிப்படையில் என்பனவாகும். இவற்றில், எழுத்து அடிப்படையில் வரும் மெய்ம் மயக்கத்தை 'உடனிலை மெய்ம்மயக்கம்' எனவும் 'வேற்றுநிலை மெய்ம்மயக்கம்' எனவும் இரண்டாகப் பாகுபடுத்திக் கூறுவதுண்டு. எண்ணிக்கை அடிப்படையில் வரக்கூடிய மெய்ம்மயக்கத்தை 'இருமெய்ம் மயக்கம்' எனவும் 'மும்மெய்ம்மயக்கம்' எனவும் இரண்டாகப் பாகுபடுத்திக் கூற முடியும். இவற்றை,




என்பதனால் எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது. இவற்றின் வகையினை 'நற்றமிழ் இலக்கணம்' என்னும் நூலில்' சொ. பரமசிவம் அவர்கள் 'மெய்ம்மயக்கம்' இரண்டு வகைப்படும். அவைகளை, 'சில மெய்கள் தம்மையொத்த மெய்களோடும் மயங்குகின்றன. பிற மெய்களோடும் மயங்குகின்றன இங்கனம் இருவகையான மெய்கள் இருக்கின்றன' என்கிறார்.

தொல்காப்பியர் நூன்மரபில் மெய்ம்மயக்கம் பற்றிய செய்திகளை இருபத்தி இரண்டாம் நூற்பா முதல் முப்பதாம் நூற்பா முடிய உள்ள நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தை இருபத்தி இரண்டாம் நூற்பா தொடங்கி இருபத்தி ஒன்பது முடிய உள்ள எட்டு நூற்பாக்களிலும் உடனிலை மெய்ம் மயக்கத்தை முப்பதாம் நூற்பாவிலுமாக விளக்கியுள்ளார். அதாவது,

**அம்மூவாறும் வழங்கியன் மருங்கின்**
**மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை**
(தொல்.எழுத்து.நூன்.இளம்.22)

என்ற நூற்பாவால் வல்லினம், மெல்லினம், இடையினம் என ஒலிக்கும் பதினெட்டு மெய்களும் வேற்றுநிலை, உடனிலை என

இருவகையான மெய்ம்மயக்கங்களாக வருகிறது என அறியமுடிகிறது.

நன்னூலார் எழுத்தியலில் மெய்ம்மயக்கத்தை ஐம்பத்தாறாம் நூற்பா தொடங்கி அறுபத்து நான்காம் நூற்பா முடிய உள்ள நூற்பாக்களில் மெய்ம்மயக்கம் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளார். இதில் இறுதி இரண்டு நூற்பாக்கள் மட்டும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் பற்றியும் ஏனையவை உடனிலை மெய்ம்மயக்கம் பற்றியதுமாக உள்ளன.

### உடனிலை மெய்ம்மயக்கம்

தொல்காப்பியர் உடனிலை மெய்ம் மயக்கத்தை,

**மெய் நிலைச் சுட்டின் எல்லா எழுத்தும்**
**தம் முன் தாம் வரூஉம் ர ழ**
**அலங்கடையே"**(தொல்.எழுத்து.நூன்.இளம்.30)

என்ற வரிகளால் குறிப்பிட்டுள்ளார். அதாவது பதினெட்டு மெய்களுள் ர்,ழ் ஆகிய இரு மெய் எழுத்துக்களைத் தவிர ஏனைய பதினாறு மெய் எழுத்துக்களும் தம் முன் தாம் மயங்கி வரும். இதற்கான சான்றுகள் இளம்பூரணர் உரை காலம் தொடங்கி தற் காலம் வரை கிடைக்கின்றன. 'எழுத்திலக்கண மாற்றம்' என்ற தற்கால உரைநடை வடிவ எழுத்திலக்கண நூலில் உள்ள, "இருமெய்ம் மயக்கத்தில் முதல் மெய் வல்லொலியாய் இருந்தால் உடனிலை மெய்ம்மயக்கமே நிகழும். அதாவது ஒரு வல்லொலி பெரும் பாலும் தன்னோடு தான் வரும்" (முனைவர்.ப வேல்முருகன், எழுத்திலக்கண மாற்றம், ப.95) என்ற பதிவு குறிப்பிடத்தக்கது. இக்கருத்து நன்னூல், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய மரபு இலக்கண நூல்களில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

### மும்மெய்ம்மயக்கம்

தமிழ்மொழியில் ஒரு சொல்லின் இடையே மூன்று மெய்கள் மயங்கி வரும் நிலை உண்டு எனினும் மொழிப்பயன்பாட்டில் குறைவான சான்றுகளே கிடைக்கின்றன. இவ்வகை தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை. இம்மும் மெய்ம்மயக்கத்திற்கு என சில சுட்டுப் பாடுகள் உள்ளன. அதாவது எந்த மூன்று மெய்களும் மயங்கலாம் என்ற நிலை இன்றி மூன்றில் முதலாவதாக வருவது ய், ர், ழ் ஆகியவற்றில் ஒன்றாகவே இருக்கவேண்டும். அந்த முதல் மெய்யை அடுத்து க், ச், த், ப், ங், ஞ், ந், ம் ஆகிய மெய்களில் க், ச், த், ப் நான்கும் இரட்டித்தும் ங், ஞ், ந், ம் நான்கும் இனவெழுத்துடன் சேர்ந்து மும்மெய்ம்மயக்க மாக வரும். இம்மயக்கம் தனிக்குறிலை அடுத்து வராது. நெடிலை அடுத்தே வரும் தம்மொடு தாமும் மயங்காது. இதனை நன்னூல், முத்துவீரியம் சுவாமி நாதம், தொன்னூல் விளக்கம் ஆகிய மரபிலக்கண நூல்கள் பதிவுசெய்துள்ளன.

நன்னூலில்,

**ய ர ழ ஒற்றின் முன் கசதப ஙஞ் நம்**
**ஈரொற்றாம் ர ழத் தனிக்குறில் அணையா**
(நன்.நூ.119)

என்ற நூற்பாவானது இதனைத் தெளிவு படுத்துகின்றது. இம்மரபிலக்கண நூல்கள் கூறியுள்ள வரையறை தற்காலத்திலும் மாற்றங் கள் இன்றிப் பொருந்துவதாக உள்ளது.

சான்று

க்க்-சாய்க்க க்க்-சேர்க்கை க்க்-வாழ்க்கை

ய் + ச்ச்- சாய்ச்சு
ர் + ச்ச்- தேர்ச்சி
ழ் + ச்ச்- தாழ்ச்சி

ப்ப்-ஏய்ப்பு ப்ப்-வார்ப்பு ப்ப்-காழ்ப்பு
த்த்-எய்தல் த்த்-பார்த்தல் த்த்-வாழ்த்து

ய் → ந்த் → தேய்ந்து
ர் → ந்த் → சேர்ந்து
ழ் → ந்த் → வாழ்ந்து

ய், ர், ழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றையும் அடுத்து நத் என்னும் இரண்டும் சேர்ந்து வரலாம். ய், ர், ழ் என்பவற்றில் யகர மெய்யை அடுத்து மட்டும் ம் ப் என்னும் இரண்டும் சேர்ந்து வரலாம்.

சான்று

ய்ம்ப் ⟶ மொய்ம்பு

மேற்கண்ட விளக்கமும் சான்றும் 'நல்ல தமிழ் இலக்கணம்' என்ற சீனி.நைனா. முஹம்மது அவர்களின் தற்கால உரை நடை வடிவ இலக்கண நூல் பதிவு செய்துள்ளது. இதே போல 'அடிப்படைத் தமிழ் இலக்க ணம்' என்ற எம்.ஏ.நுஃமான் அவர்களின் 'தற்கால உரைநடை வடிவ இலக்கண' நூலும் பல்வேறு வகையான சான்றுகள் காட்டி விளக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### மெய்ம்மயக்கத்தில் சில அடிப்படை இயல்புகள்

மெய்ம்மயக்கத்தின் அடிப்படை விதிக ளாக கீழ்காணும் சிலவற்றை தொகுத்தளி க்க இயலும். அதாவது, 'ர், ழ் இரண்டும் தன்னு டன் தான் மயங்காது: ஈறாக வரும் மற்ற எல்லா மெய்களுடனும் மயங்கும். ர், ழ் தவிர்த்த மற்ற எல்லா மெய்களும்

தன்னுடன் தான் மயங்கும். க,ச,த,ப நான்கும் தன்னுடன் மட்டுமே மயங்கும். மெல்லின மெய் எல்லாம் தன் வல்லினத்துடனும் மயங்கும். யகரமெய் ஈறாகக் கூடிய எல்லா மெய்களுடனும் மயங்கும். வகர மெய் ஞ்,ந் தவிர ஈறாகக்கூடிய மற்ற எல்லா மெய்களுடனும் மயங்கும். க,ச,த,ப மெய்கள் ட்ற், ண்ன், ள்ல், ய்ர்ழ் ஆகியவற்றுடன் மயங்கும்.

ண் ன் ள் ல் + தந = திரிந்துதான் புணரும்.

ள்ல் + ஞம = திரிந்துதான் புணரும்.

ம் + க ச த = ம், இன மெல்லெழுத்தாகும்.

ம் + ஞந = ம் அடுத்து வரும் மெய்யாக வரும்.

ய், ர், ழ் என்ற மூன்று மெய்களுடன் மயங்கும் மெய், உயிர்மெய் வடிவிலும் மயங்கலாம். புள்ளியுடன் மெய் வடிவிலேயும் மயங்கலாம். மற்ற மெய்கள் மெய் வடிவிலேயே அடுத்தடுத்து வர மாட்டா; மெய்யும் உயிர்மெய்யுமாகவே வரும். சான்று; பொய்சொல் › பொய்ச்சொல்; சேர்க › சேர்க்க; வாழ்க› வாழ்த்து. போன்ற சான்றுகளை நல்ல தமிழ் இலக்கணம் என்ற நூலில் பதிவு செய்துள்ளதைக் கொண்டு தற்கால மெய்மயக்கத்தின் அடிப்படை விதிகளை அறியமுடிகின்றது.

**மயங்கும் மெய்களும் மயங்கா மெய்களும்**

சொற்களில் அடுத்தடுத்து வரும் சில மெய்களை ஒலிப்பதற்கு அதிக முயற்சி தேவைப்படுகிறது. இதற்கு ஒலிப்பைச் சார்ந்த காரணம் உண்டு. சில சொற்களில் தொடர்ந்து வந்த மெய்கள் ஒன்றுக்கொன்று ஒலிப்பில் போதிய இயைபு இல்லாதனவாக இருந்தால் அவற்றை ஒலிப்பது கடினமாக இருக்கும். சில சொற்களில் தொடர்ந்து வந்த மெய்கள் ஒன்றுக்கொன்று இயைபு உடையனவாக இருந்தால் அவற்றை ஒலிப்பது எளிதாய் அமையும். பிறப்பாலும் முயற்சியாலும் ஒருமைப்பாடற்ற மெய்களை அடுத்தடுத்து ஒலிப்பது கடினம். ஆனால், இவ்வகையில் ஒருமைப்பாடுடைய மெய்களை அடுத்தடுத்து ஒலிப்பது எளிது. சொற்களில் அடுத்தடுத்து வரும் மெய்கள், ஒன்றுக்கொன்று இயைபுடையனவாக இருந்தால் 'மயங்கும் மெய்கள்' என்றும் இயைபுடையனவாக இல்லையெனில் 'மயங்காத மெய்கள்' என்றும் இலக்கணத்தில் குறிக்கப்படுகின்றன.

## மெய்ம்மயக்கத்தில் தற்கால மாறுபாடுகள்

மெய்ம்மயக்கம் ஆனது தனிமொழிக்கும் புணர்மொழி பொதுவானதாகும். தனி மொழியில் சான்றுகள் காண முடியாத போது சொற்கள் வழக்கிறந்தன என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவார். இளம்பூரணர தொடர்மொழிச் சான்றுகளைக் கூறி மெய்ம்மயக்கம் இரு மொழிக்கும் உரியது என்பார். வினைத்தொகையும் பண்புத் தொகையும் பவணந்தி முனிவரால் ஒரு சொல்லாகக் கருதப்படுவதால் அவையே சான்றாகின்றன. மெய்ம்மயக்க விதிக்குள் நிற்கின்ற சொற்களும் காலத்தால் திரிவடைகிறது. தற்காலத்தில் பேச்சுவழக்கில் பெரும்பாலும் இவ்வாறு திரிந்தே ஒலிக்கப்படுகிறது. "டற முன் க ச ப மெய்யுடன் மயங்கும்" என்பது நன்னூல் விதி. இவ்விதி ஒலிப்பு எளிமை முயற்சியின் காரணமாகப் பேச்சுத்தமிழில் திரிந்து வழங்குகிறது. இத்திரிந்த வடிவத்தை இன்றைய இலக்கியங்களான சிறுகதை, நாவல், புதுக்கவிதை போன்றவை பிரதிபலிக்கின்றன. இவைகளில் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் உடனிலை மெய்ம்மயக்கம் ஆகிறது.

தற்காலத் தமிழில் பிற மொழிச் சொற்களின் கலப்பு மிகுதியாகி உள்ளது. இதன் காரணமாக இலக்கண நூலார் மெய்ம்மயக்கத்திற்கு வகுத்த கட்டுப்பாடு மீறப்படுகின்றது. இதையே, மொழி நூலார் 'உருபமைப்புக் கட்டுப்பாடு மீறல்' என்கின்றனர். மொழி நூலரே இதை தடுக்கவும் மூன்று வழிகள் இருப்பதாகவும் பதிவு செய்துள்ளமை எழுத்திலக்கணம் மாற்றம் என்ற நூல் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு முடிவுகள்

தமிழ் மொழியின் சொற்கள் குறிப்பிட்ட எழுத்துக்களின் ஒழுங்குமுறைக்குப்பட்டே இயங்குகின்றன என்பது புலனாகிறது. இவ்வியங்குமுறை அமைப்பு காலந்தோறும் மாறாத ஒன்றாகும். ஒலிப்பு எளிமை முயற்சியின் காரணமாக 'வெட்கம்' என்பது 'வெக்கம்' என்று மாறும். இது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் உடனிமை மெய்ம்மயக்கமாக மாறுவதைக் குறிக்கிறது. இன்றைய கால கட்டச் சூழலில் அயல்மொழிக் கலப்பு தமிழ் மொழிக்கு இன்றியமாத ஒன்றாகிவிட்டது. இதன் காரணமாகவே சில உருபனமைப்புகள் மாற்றம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. இதனை நம்மொழி மரபிற்க்கேற்ப மாற்றிப்பயன்படுத்தும் முறையும் வழக்கில் உள்ளது. என்பன போன்ற முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

## எதிர்கால ஆய்வுகள்

மெய்யங்களுக்கான சில சான்றுகள் தொகைச் சொற்களாக அமைகின்றன. ஆகவே மெய்மயங்களுக்கும் புணர்ச்சிக்குமான தொடர்புகளை எதிர் காலத்தில் ஆய்வாக மேற்கொள்ளலாம்.

## துணைநூற்கள்

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (இளம்பூரணர்)
2. நன்னூல் எழுத்ததிகாரம் (காண்டிகையுரை)
3. எழுத்திலக்கணமாற்றம் ப. வேல்முருகன்
4 அடிப்படைத்தமிழ் இலக்கணம் எம். ஏ. நுஃமான்.
5 நல்ல தமிழ் இலக்கணம் சீனி நைனா முஹம்மது
6. க்ரியா தமிழ் அகராதி
7 தமிழ் இலக்கண உணர்வுகள் ஆ. சிவலிங்கனார்
8 பயன்பாட்டு இலக்கணம் பேரா. சிவ. விவேகானந்தன்